**மண்முனை பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

---

## 1 நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 19 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 30 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மண்முனை பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்.

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடு

சபையின் ஊழியர்கள் தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ஒய்வூதிய பங்களிப்பு பணம் ரூபா 507,544 கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 6,923,090 ஆக இருந்ததுடன் ஒப்பிடுகையில் அதற்கு நேர் முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 13,456,670 ஆக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ பலவீனம்

2015 ஆம் ஆண்டில் ரூபா 891,194 செலவில் சிறுவர் பூங்காவில் விளையாட்டுக் கார் ஓடுதளம் அமைக்கப்பட்டு அதற்காக ரூபா 126,250 செலவில் 04 விளையாட்டு கார்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் கொள்வனவு செய்து ஒரு மாதத்திற்குள் அவை பழுதடைந்ததன் காரணமாக அக்கார்கள் இன்று வரை பயன்படுத்தாது வைக்கப்பட்டுள்ளன. எனவே இதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 1,017,444 தொகை விளைவற்ற செலவாக மாறியுள்ளது.

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

சபை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட ஒழுங்கீனங்கள் மற்றும் குறைபாடுகள் சம்பந்தமாக சபையினால் இதுவரை சீர் செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகளுக்கான தொடர்பு கீழே தரப்பட்டுள்ளன.

| அறிக்கைக்கான தொடர்பு | | உள்ளடக்கப்பட்ட விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2015 | 2.2.2 (ஆ) | 1990 ஆம் ஆண்டு அழிக்கப்பட்ட சொத்துக்களை ஏடுகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்காமை. |
| 2015 | 2.2.3 (அ) | மின் பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிட 25 ஆண்டுகளுக்கு மேலாக நடவடிக்கை எடுக்காமை. |
| 2015 | 2.2.3 (ஆ) | இலங்கை மின்சார சபைக்குச் செலுத்த வேண்டிய பணத்தை செலுத்துவதற்கு 25 ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்காமை. |
| 2015 | 2.2.5 (I) | பிணைப் பணம் பெறவேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப் பணம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| 2015 | 4.1 (ஆ) | சபைக்கு அன்பளிப்பாக ஒப்படைக்கப்பட்ட 03 வாகனங்கள் உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்காமை. |
| 2015 | 4.2 (ஆ) | பயன்படுத்தப்படாத உடற்பயிற்சி இயந்திரங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை. |

## 5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) கணக்கீடு | பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகளை கணக்கீடு செய்தல். |